தமிழ்நாடு சட்ட மன்றம்.

திங்கட்கிழமை, 1972 ஆகஸ்ட் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில், மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் [திரு. சி. பி. சிற்றரசு] அவர்கள் தலைமையில் சட்டமன்றம் கூடியது.

1. வினாக்கள்–விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Employment Market Survey.

*142 *Q.*—Thiru K. RAJARAM (on behalf of Thiru V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Employment Market Survey into the placement of the Apprentices trained under the Apprenticeship Act, 1961 has been undertaken in this State;

(*b*) if so, the details thereof; and

(*c*) if not, the reasons therefor?

வேலை வாய்ப்பு நிலவர ஆய்வு

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1961 ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின் கீழ் தொழில் பயிற்சி பெற்றவர்களை இம்மாநிலத்தில் வேலையில் நியமிப்பதற்கு வேலை வாய்ப்பு நிலவர ஆய்வு ஏதேனும் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தமிழ் நாட்டில், தொழில் பழகிய கைவினைஞர்களுக்கான வேலை வாய்ப்பு குறித்து, ஆழ்ந்த ஆய்வு ஒன்று, 1967 ஆம் ஆண்டு ஏப்ரல்/ஆகஸ்டு திங்களில் நடத்தப்பட்டது. இந்த ஆய்வில், 1964, 1965 ஆம் ஆண்டுகளில் தேர்ச்சி பெற்ற தொழில் பழகியோரும் அடங்குவர். தேர்ச்சி பெற்ற 197 கைவினைஞர்களிடம், அவர்கள் எந்த வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர், அவர்கள் பெறும் சம்பளம் எவ்வளவு, வேலை குறித்து அவர்களுடைய மனநிறைவு முதலியவை குறித்த தகவலை அஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டு அது குறித்த வினாப்பட்டியல் ஒன்றும் அனுப்பப்பட்டது. அவர்களில் 117 பேர் பதிலளித்தனர். அவர்கள் அளித்த பதிலில் விருப்பு வெறுப்பு அற்ற முறையில் அமைந்துள்ளதா என்று பார்த்து உறுதி செய்வதற்காக, அவர்கள் எந்த நிறுவனங்களில் பணிபுரிகிறார்களோ அந்த நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டதன் மூலம், பூர்த்தி செய்து அவர்களால் அனுப்பப்பட்ட வினாப்பட்டியலில் ஒரு சதவீதம் சரி பார்க்கப்பட்டது.

(உ) இவ்வினா எழவில்லை.

Aluminium Paste Plant.

* 143 *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Aluminium Paste Plant near Tirumangalam in Madurai District, has been commissioned about November 1971;

(*b*) if so, to furnish the details regarding—

(i) when the Plant actually went into production;

(ii) the total outlay;

(iii) the production per year;

(iv) the capital invested;

(v) the details of the collaborators; and

(vi) the market facilities available for the product?

அலுமினியம் தொழிற்சாலை

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டம் திருமங்கலத்துக்கருகிலுள்ள அலுமினியம் தொழிற்சாலை 1971, நவம்பர் மாத அளவில் உற்பத்தியைத் தொடங்கி விட்டதா?